★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/8945/78

மலர்: 21 பங்குனி 16 ரபி–ஆகி 30 இதழ்: 47
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 30-3-79

காதுகேட்பது சிரமமாக இருக்கிறதே என்பது ஒரு குறையாக இருக்கிறதா?
ஃ குடும்பத்தினருடன் சேர்ந்து மகிழ றியோனட் (RIONET) காது கேட்கும் கருவிகளைப் பாவியுங்கள் நேரில் வந்து பரீட்சித்துப் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும்
சகல வைபவங்களுக்கும் ஏற்ற பரிசுப் பொருட்கள், நூல் வகைகள், ஆகியவற்றுக்கு நாடவேண்டிய இடம்
கிருபா கிவ்ற் கவுஸ்
KIRUBA GIFT HOUSE,
சோதிட விலாஸ் கட்டிடம்
46, பெரியகடை - யாழ்ப்பாணம்.

## வீதி இணைப்பில் சமரச முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் ஸ்ராவிலி வீதியிலிருந்து ஸ்ரீ வேங்கடேசன் வீதியை இணைக்கும் தனியார் காணி ஒழுங்கையொன்று கடந்த பல வருடங்களாகப் பாவிக்கப்பட்டுவந்ததென்றும் தற்போது இந்த ஒழுங்கை தடை செய்யப்பட்டுள்ளதால் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமான் கோவிலுக்கும் சன்மார்க்க மகாவித்தியாலயத்துக்கும் செல்பவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்களென்றும் அப்

[6-ம் பக்கம் பார்க்க]

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
1979-3-24
PERIODICALS DIVISION
LIBRARY

# கோர பஸ் விபத்து: ஒரு பெண் பலி! 12 பேர் காயம்!!

## மண்டைதீவுச் சந்திக்கு அருகில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து குறிக்கட்டுவான் நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ். பண்ணை வீதியில் கோர விபத்துக்குள்ளாகியதில், ஒரு பெண் ஸ்தலத்திலேயே பலியானார்! காயங்களுக்குள்ளான பன்னிரண்டு பேரில் அறுவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை பண்ணை பிரதான வீதியில் மண்டைதீவு சந்தியிலிருந்து சுமார் இருநூறு யார் தூரத்தில் நேற்றுக் காலை சுமார் பத்து மணியளவில் நடந்த இவ் விபத்தில் 12 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். காயமடைந்தவர்களில் நான்குபேர் பெண்களாவர். பஸ் சாரதி திரு. இ பிரான்சிஸ் பவுலிஸ் [பொன்ரசா] என்பவர் படுகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### தெய்வாதீனமாக உயிர்தப்பினர்

பஸ் வண்டி குடைசாய்ந்த இடத்தில் கடல்நீர் வற்றியிருந்ததால் பஸ்ஸில் சென்ற பிரயாணிகள் பலர் தெய்வாதீனமாக உயிர்தப்பமுடிந்தது.

யாழ். டிப்போவைச் சேர்ந்த 23 ஸ்ரீ 3544 இலக்க பஸ் வண்டியே இந்த விபத்துக்குள்ளானதாகும்.

50 பிரயாணிகளில் 12பேர் காயமடைந்தனர்.

### குடைசாய்ந்தது

யாழ்ப்பாணத்திலிருந்து 776ம் இலக்க பாதையூடாக குறிக்கட்டுவான் செல்லப்புறப்பட்ட இந்தப் பஸ்வண்டி பண்ணைப்பாலத்தில் உழவு யந்திரம் ஒன்றிற்கு விலத்து கையிலேயே குடைசாய்ந்ததாகக் கூறப்பட்டது.

இ. போ. ச. பஸ் டிப்போ உத்தியோகத்தர்கள் ஸ்தலத்திற்குச் சென்று பார்வையிட்டனர். தீவுப்பகுதி பஸ் பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு.பி.ஜே.அலோசியஸ், இச் சங்க நடவடிக்கைக்குழு உறுப்பினர் திரு. எஸ். பாலசிங்கம் ஆகியோரும் விபத்து நடந்த இடத்தையும் காயமடைந்தவர்களையும் பார்வையிட்டனர்.

காலமானபெண் விதவையென்றும் மூன்று பிள்ளைகளின் தாய் என்றும் இவர் மீன் பிடித்து வியாபாரம் செய்தே வாழ்க்கை நடத்தி வந்தாரென்றும், மீன் பிடிப்பதற்காக கடலுக்குச் செல்லும் பொருட்டு பஸ்ஸில் சென்றபோதே இக் கோர விபத்து நிகழ்ந்ததென்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சிறிது தூரத்தில் இவர் இறங்க வேண்டியிருந்ததால், தான் இருந்த இடத்தில் வேறொரு பெண்ணை இருக்கச் சொல்லிவிட்டு அவர் எழுந்து நின்றபோதே இக் கோரவிபத்து நிகழ்ந்ததாகவும் அப்போது இவர் பஸ்ஸில் இருந்த பிரயாணிகளால் உலக்கப்பட்டே இறந்திருக்

(6-ம் பக்கம் பார்க்க]

## தமிழன் எங்கு வாழ்ந்தாலும் எதுவுமே பிரிக்கமுடியாது

—யோகேஸ்

### ஈழத் தமிழரின் நிலையை எமது தலைவரிடம் எடுத்துக்கூறுவேன்

---அ. இ. அ. தி. மு. க, அமைப்பாளர்

[யாழ்ப்பாணம்]

"தமிழர் எங்கு வாழ்ந்தாலும் மொழியால், நாகரிகத்தால், கலை கலாச்சாரத்தால் ஒன்றுபட்டவர்கள். எங்களைக் கடல் பிரிக்கலாம், அரசு பிரிக்கலாம்; எந்தச் சக்தி எம்மைப் பிரித்தாலும், எங்கு நாம் வாழ்ந்தாலும், எங்களை எதுவுமே நிரந்தரமாகப் பிரித்துவிட முடியாது; தமிழன், தமிழனே."

இவ்வாறு குருநகர் அண்ணா சிலைக்கு முன்பாக நேற்று முன் தினம் மாலை நடைபெற்ற அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தமிழ் நாடு ராமநாதபுர மாவட்ட எஸ். பி. பட்டண அமைப்பாளரும் 'புரட்சித் தென்றலு'மான ஜனாப் எஸ்.ஜே.சாஹித்திற்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில் கூறினார்.

குருநகர் எம். ஜி. ஆர். மன்றம், யாழ். பாரதி எம். ஜி. ஆர். மன்றம், கீரிமலை எம். ஜி ஆர் மன்றம் ஆகியவை இவ்வரவேற்புக் கூட்டத்தை நடாத்தியது. திரு. ஜே. டியூக் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. வெ யோகேஸ்வரன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"உலகத்தில் எத்திக்கில் தமிழன் வாழ்ந்தாலும் அவனுக்கு எவ்வித இன்னல் வந்தாலும், அவனுக்காக உலகில் வாழும் அத்தனை கோடித் தமிழர்களும் குரல் கொடுப்பார்கள்! கிழக்கு மாகாணத் தமிழருக்கு இயற்கையாக இன்னல் விளைவிக்கப்பட்டபோது அறிஞர் அண்ணாவின் பாசறையில் வளர்ந்த தம்பி

(6-ம் பக்கம் பார்க்க)

### இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகம்:

## இறந்தவருக்கு பலர் அஞ்சலி

[மன்னார்]

கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு, இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான கடற்றொழிலாளி செ பிரான்சிஸ் டலஸின் (ராஜன்) பிரேத ஊர்வலம் நேற்றுக் காலை மன்னார் பனங்கட்டிக்கொட்டியில் நடைபெற்றது.

பிரேத ஊர்வலத்தில் மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் உட்படப் பெருந்தொகையான தமிழ் இளைஞர் பாடசாலை மாணவ, மாணவிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பிரேத ஊர்வலத்தில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகளை மீண்டும் பாடசாலைக்குள் அனுமதிக்கவேண்டாமென மன்னார் மாவட்டக் கல்வியதிகாரி வேண்டுகோள் விடுத்ததாகவும் சம்பந்தப்பட்ட அதிபர்கள், ஊர்வலத்தில் கலந்துகொண்ட மாணவர்களைப் பாடசாலைக்குள் அனுமதிக்கவில்லை எனத் தெரியவருகிறது. சில மணித்தியாலங்களின் பின்னர் மன்னார் எம். பி யின் தலையீட்டைத் தொடர்ந்து மாணவர்கள் மீண்டும் பாடசாலைக்குள் அனுமதிக்கப்பட்டனராம்.

[கெ]

## கசிப்பு பீப்பாவை போட்டுவிட்டு ஓடினராம்

(மானிப்பாய்)

"கசிப்பு" வேட்டைக்காகச் சென்ற பொலிசாரைக் கண்டதும் வீதியால் கசிப்பைக் கொண்டு சென்ற ஒருவர் அதைப் போட்டுவிட்டு ஓடித்

[6ம் பக்கம் பார்க்க]

## சீ-நோர் களஞ்சியத்தில் குறுலோன் வலைத் திருட்டு

[யாழ்ப்பாணம்]

குருநகரிலுள்ள சீநோர் களஞ்சியத்தின் கூரையைப் பிரித்து முப்பத்தொன்பதாயிரத்து அறுநூற்றி முப்பத்தினான்கு ரூபாய் பெறுமதியான குறுலோன் வலைக்கயிறு திருடப்பட்டுவிட்டதாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிசார் தீவிர புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

இத்திருட்டுச் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் கருணாகரன், வில்பிரட், இந்திரா, தெய்வேந்திரன், வில்லிகுமார், பிரான்சிஸ் ஆகியோர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

## ஜி. சி. ஈ. உயர் வகுப்பு அனுமதி: வடமாநில கல்வி அதிபதி விளக்கம்

### முன்னர் படித்த பாடசாலை விபரம் கோருகிறார்

[யாழ்ப்பாணம்]

ஜி. சி. ஈ உயர்தர வகுப்பு உள்ள பாடசாலைகளில் இருந்து வேறுபாடசாலைகளில் அனுமதி கோரி விண்ணப்பித்த மாணவர்களுக்கு தாம் விண்ணப்பித்த புதிய பாடசாலையில் இடம் கிடைக்காது!

அவர்கள் தொடர்ந்தும் தாம் பயின்றுவந்த பாடசாலைகளிலேயே தமது உயர்கல்வியைப் பெறவேண்டும்

ஜி. சி. ஈ. உயர்வகுப்பு இல்லாத பாடசாலைகளிலிருந்து விண்ணப்பித்த மாணவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு புதிய பாடசாலைகளில் அனுமதி வழங்கப்படும்.

இத்தகவலை வடமாநிலக் கல்வி அதிபதி திரு. தி மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டுகளிலும் பார்க்க இம்முறை அதிக மாணவர்கள் ஜி சி ஈ சாதாரண பரீட்சையில் உயர்கல்விபெறும் தகுதியுடன் சித்தியடைந்ததைத் தொடர்ந்து பாடசாலை அதிபர்களுக்கும் கல்விப்பகுதிக்கும் பெரும் தலையிடி இருந்து வந்தது தெரிந்ததே. இதனையடுத்து வடமாநில வித்தியாதிபதி திரு. மாணிக்கவாசகர் கொழும்பு கல்வித்திணைக்களத்துடன் தொடர்புகொண்டதையடுத்து. ஜி சி ஈ உயர் வகுப்பு ஏற்கனவே இருந்துவரும் பாடசாலைகளிலிருந்து விண்ணப்பித்த மாணவர்கள் தொடர்ந்தும் அங்கேயேதமது உயர்கல்வியைப் பெறவேண்டுமென்றும் அல்லாதவர்களின் விண்ணப்பங்களைப் பரிசீலிக்கப்படவேண்டுமென்றும் கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளதாக திரு. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

### கல்விப்பகுதி சிரமம்

ஜி சி ஈ உயர்தர வகுப்புக்கு அனுமதிகோரி இதுவரை விண்ணப்பித்துள்ள மாணவர்களின் விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரிகள் எவ

[6ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

அலுமினியம் தொழிற்சாலைக்கு ஸ்பின்னிங் (Spinning) வேலையில் நன்கு அனுபவமுள்ள ஆட்கள் தேவை. ஜனஸ் அன் கோ., நிர் 1, நியூ மார்க்கட், யாழ்ப்பாணம். 2008

சைக்கிள் மூலம் பால் விநியோகம் செய்யக்கூடிய ஒருவர் தேவை. உடன் நேரில் வரவும், திருமகள் பால் விநியோக நிலையம், 53, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 2034

கற்பூரம், நீலம், விநியோகிப்பதற்கு விற்பனையாளர்கள் தேவை. சொந்தவாகனமுள்ளவர்கள் 5-4-79க்கு முன் விண்ணப்பிக்கவும். விபரங்களுக்கு நேசன் இன்டஸ்றீஸ், 230, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 2014

### பயிற்சி

ஆங்கிலம் சிறந்த சுலபமான முறையில் திரு. வ. பொன்னம்பலம் M A. நடாத்துவார். உடன் தொடர்பு கொள்ளவும், NATIONAL INSTITUTES, 57, பாங்சேசல் வீதி, யாழ்ப்பாணம். 1959

கட்டட மேற்பார்வையாளர் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பயிற்சிகள் 11-4-1979-ல் ஆரம்பம். I. A. R. 615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2029

### கல்வி

வீடுகள் சென்று ஆங்கில இலக்கியம், இலக்கணம் (Emma, Mc Betn, Poetry) ஆங்கிலப் பேச்சு (Spoken English) கற்றுக்கொடுக்கப்படும். கடிதமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1962 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1962

### காணவில்லை

கந்தரோடை கிராமசேவையாளர் வேலும்மயிலும் வீட்டிலிருந்த எனது மகன் டேவிட் மாத்தையாவைக் (வயது 10) காணவில்லை. சிவந்த நிறம், மூன்று அடி உயரம். தகவல் தெரிந்தவர் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கோ, எனக்கோ அறிவிக்கவும். கே. ஜி. நந்தாவதி, கந்தரோடை, சுன்னாகம். 2033

## கேள்வி விளம்பரம்

### மாட்டிறைச்சி விற்கும் உரிமை - 1979

கிளிநொச்சிச் சந்தையில் 1-ம், 2-ம் இலக்க கடைகளிலும், பரந்தன் சந்தை 1-ம் இலக்கக் கடையிலும் மாட்டிறைச்சி விற்பனை செய்யும் உரிமைகோரி கேள்விகள் 05-04-1979ந் திகதி பிற்பகல் 2-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். மீளளிக்கப்படும் கேள்விப்பத்திரப் பிணைப்பணம் ரூபா 150/-ம் மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் ரூபா 25/-ம் செலுத்துவதன் பேரில் கேள்விப் பத்திரம் 03-04-1979ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் வழங்கப்படும்.

சென்ற வருடக் கேள்விகளிலும் குறைந்த கேள்விகளை பரிசீலனைக்கு எக்காரணம் கொண்டும் எடுத்துக்கொள்ளப் படமாட்டாது.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

மூ. சின்னையா
விசேட ஆணையாளர்,
கிளிநொச்சிப் பட்டணம்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
கிளிநொச்சிப் பட்டணம்,
கிளிநொச்சி.
1979-03-27. 2031

## தவக்கால நற்சிந்தனை

"மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை என்று அறிந்திருக்கிறோம். மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை. அவர் மரித்தது பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார், அவர் பிழைத்திருக்கிறது தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்." (ரோமர், 6 : 9 - 10)

சிந்தித்துப் பாருங்கள். தேவனுக்கென்று பிழைத்திருக்கிற இயேசுபிரான் நமது பிழைகளையும் மன்னிக்க வருவார் என்பதில் சந்தேகமென்ன! அப்போது நாம் பிழையுள்ளவர்களாகவே இருக்கப்போகிறோமா என்பதை நாமே முடிவு செய்து கொள்ளவேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதை எண்ணி நாம் நமது வாழ்நாளில் நடந்தாக வேண்டாமா?

—ஞானஒளி!

தொகுப்பு: வில்பிறெட்

## கரைதுறைப்பற்று ப. நோ.கூ. சங்கம், முல்லைத்தீவு
## வெற்றிடம்

பொதுமுகாமையாளர்
தரம் 111

மேற்படி பதவிக்கான விண்ணப்பம் இலங்கை வாசிகளிடமிருந்து கோரப்படுகிறது. விண்ணப்பங்கள் அண்மையிற் பெற்ற இரண்டுநற் சான்றிதழ் பிரதிகளுடன் 12-4-79க்கு முன்னதாகத் "தலைவர், ப. நோ. கூ. சங்கம், முல்லைத்தீவு" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படவேண்டும். தபால் மேலுறையின் இடது பக்க மூலையில் "விண்ணப்பம்-பொது முகாமையாளர் தரம் 111" எனக் குறிப்பிட வேண்டும்.

தகமைகள்

1. கூட்டுறவுப்பயிற்சிபெற்ற பட்டதாரி,
2. 3 வருட கால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர்தர தராதரப் பத்திரம்.
3. 5 வருட காலஅனுபவம் பொருந்திய முன்னைநாள் கூட்டுறவுப் பரிசோதகர் அல்லது,
4. ரூபா 20,00,000 பிணை வருடாந்த மொத்த விற்பனைவாசுக்கொண்ட வியாபாரத் தாபன மொன்றில் மேல் முகாமைப் பதவி ஒன்றில் 3 வருடகால அனுபவமுடைய ஒருவர்'
5. காசுப்பிணை 2000/-ம், காணிப்பிணை 5000/-ம் கட்டப்படவேண்டும்.

வயது:
23 க்கும் 50க்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

வேதனம்:
340-590

19/10, 16/5
(உரிய விசேட படிகள் வழங்கப்படும்)

மேற்கொண்ட விபரம் தேவைப்படின், 12-5-72 திகதிய 5009/6/1 2 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

தலைவர்
கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம்
முல்லைத்தீவு. 2122

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

"கோவில்களில் உயிர்ப்பலி:

## தடுப்பதற்கு சட்ட உதவியும் ஏற்படுத்துக"

[யாழ்ப்பாணம்]

"இலங்கையிலுள்ள சில இந்துக் கோவில்களில் மிகவும் அநாகரிகமான முறையில் பலியிடுதல் நடைபெற்று வருகின்றது. இதனை நிறுத்த சட்டத்தின் உதவியும் அவசியமாகின்றது."

இவ்வாறு நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகத்துக்கு இலங்கை இந்து இளைஞர் பேரவைத் தலைமைச் செயலாளர் திரு. க. சச்சிதானந்தன் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவரது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"கோவில் முகாமையாளருக்கும், வழிபடுவோருக்கும் அறிவூட்டியதன் மூலம் பல கோவில்களில் இவ்வழக்கம் கைவிடப்பட்டுள்ள போதிலும் சில கோவில்களில் இன்னமும் உயிர்ப்பலி நடைபெற்று வருகின்றது. இப்பாதகமான செயலைக் கண்டித்துப் பிரசாரம், அறவழிப்போராட்டம் போன்ற முறைகளைக் கடைப்பிடித்தாலும் சட்டத்தின் உதவியும் அவசியமாகின்றது. ஒரு சமுதாயத்தின் நல்வினைவுகளே தான் சட்டமாக அமைகின்றது.

பங்குனி மாதம் கோவில்களில் பலி விழாக்கள் ஆரம்பமாகிவிட்டன. தொடர்ந்து ஆனிமாதம் வரை இவ்விழாக்கள் நடைபெறவுள்ளன. இதை எதிர்த்து நாங்கள் தீவிர பிரசாரம் செய்யத் தொடங்கியுள்ளதால் சட்டமும் உதவி செய்தால் இதை முற்றாக நீக்கிவிடலாம்." [கு-அ]

## "வாழ்வின் அடிப்படைத் தத்துவம் நம்பிக்கையே"
### சங்கானையில் வடிவேல் சுவாமி

(சங்கானை)

"நம்பிக்கைதான் மனிதவாழ்க்கையின் அடிப்படைத் தத்துவம். ஆண்டவனை நம்பினால் வாழ்க்கையில் எவ்வித துன்பமும் இல்லை. மதங்கள் பலவேறாக இருக்கலாம் ஆனால் ஆண்டவன் ஒருவனே."

இவ்வாறு கிளிநொச்சி ஜயந்திநகர் மகாதேவ ஆச்சிரம ஸ்தாபகர் உயர்திரு க. வடிவேல் சுவாமி சங்கானை நாகலிங்கசுவாமிகள் வீதியில் அமைக்கப்பட்ட தவத்திரு நாகலிங்க சுவாமிகள் நினைவாலயத்தைத் திறந்து வைத்துப் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

அவர் தமது தலைமையுரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

"மனித சமுதாயத்தை முன்னேற்றுவதற்கென்று யோகிகளும் ஞானிகளும் இப்பூவுலகில் அவதரிக்கிறார்கள். இப்படி அவதரித்தவர்களில் தவத்திரு நாகலிங்கசுவாமிகளும் ஒருவராவார். வாழ்க்கையில் மிகுந்த வறுமைப்பட்டிருந்தபோதிலும் தமது பிரசங்கங்கள்மூலம் சமய அறிவை வளர்த்துவந்தார்.

"வறுமையின் கொடுமை தாங்கமுடியாத சமயங்களில் யோகர்சுவாமிகளிடம் சென்று ஆசி பெற்று அமைதி பெறுவது வழக்கம். ஒரு சமயம் இப்படியான ஒரு நிலையில் இங்கிருந்து யோகர்சுவாமிகளைத் தரிசிக்கப் புறப்பட்டார் அவர் இங்கு புறப்படும்பொழுதே நல்லூரில் யோகர் சுவாமிகள் தமது பரிசாரகரை அழைத்து" அடியவர் ஒருவர் வருகிறார்; அறுசுவை உண்டி தயாரியுங்கள்" என்று கட்டளையிட்டார். இது மட்டுமல்ல சுவாமிகள், யோகர் சுவாமிகளிடம் சென்று ஒரே கட்டிலில் இருந்து உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது திடீரென்று யோகர் சுவாமிகள் அடிகளாரைப்பார்த்து பொற்கிளிப் பதிகத்தைப்பாடும்படி கேட்டார். அடிகளும் மனமுருகி பொற்கிளிப் பதிகத்தைப்பாடி முடித்ததும் யோகர் சுவாமிகள் 'பொற்கிளிப்பதிகத்தைப் பாடினாய் உனக்கு பொன் கிடைக்கும்'' என்றார்

"இச்சமயத்தில் யோகர் சுவாமிகளின் ஆசிபெற்று மலாயா தேசம் சென்று வர்த்தகத்துறையில் பெருந் பொருள் ஈட்டிய ஒரு அன்பர் தாம் தினமும் யோகர் சுவாமிகளுக்கென்று உண்டியலில் போட்டுவைத்த ஒவ்வொரு வெள்ளி ரூபாக்களையும் அதை பொற்கிளியாக்கி பழம் பாக்கு வெற்றிலையுடன் யோகர் சுவாமிகளுக்கு சமர்ப்பணம் செய்யவந்தார் இந்த சமர்ப்பணத்தை ஏற்றுக்கொண்ட யோகர் சுவாமிகள் அதை நாகலிங்க அடிகளாரிடம் கொடுத்து அவற்றை அங்கே வைத்து பார்க்கக்கூடாதென்றும் வீட்டிற்குச் சென்று பார்க்கும்படியும் கூறினார். வீட்டிற்கு வந்த அடிகளார் பொருட்களைப் பார்த்தபொழுது அங்கே பொற்காசுகள் இருக்கக்கண்டு உணர்ச்சிவசப்பட்டு கண்ணீர் மல்கினார்.

"இது எதைக்காட்டுகிறது என்றால் பொற்கிளிப்பதிகம் பாடினால் பொன் கிடைக்குமென்பது மட்டுமல்ல யோகிகள் தம்துன்பத்தை வெளியே காட்டாமல் இருந்தபொழுதிலும் கூட ஏனைய யோகிகளால் அவர்கள் துன்பத்தை அறிந்து பரிகாரம் காணக்கூடியதாக இருந்தும் என்பதே'' [இ]

## சமாதான நீதவான்



[பண்டத்தரிப்பு]

சில்லாலையைச்சேர்ந்த வைத்திய சிரோமணி திரு எஸ். பி. ஈ. இன்னாசித்தம்பி சமாதான நீதவானாக அண்மையில் யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு. ஆசீர்வாதம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். அகில இலங்கை சித்த ஆயுர்வேத சங்கத் தலைவராகவும், கொழும்பு வைத்தியக் கல்லூரி ஆஸ்பத்திரி சபை நிர்வாக உறுப்பினராகவும், ஆயுர்வேத வைத்திய சபை உறுப்பினராகவும் இவர் பல ஆண்டுகள் கடமையாற்றி சித்த ஆயுர்வேதத்துறையின் வளர்ச்சிக்காக பெரும்தொண்டாற்றியுள்ளார்.

வடஇலங்கை சித்த ஆயுர்வேத மருத்துவர்கள் சம்மேளனத்தின் தலைவராகக் கடந்த 12 வருடங்களாக கடமையாற்றிவரும் திரு. இன்னாசித்தம்பி வடஇலங்கை சுதேச வைத்திய சபையின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

பிரசித்திபெற்ற சில்லாலை வைத்திய பரம்பரையின் 9வது தலைமுறையான வைத்திய சிரோமணி இன்னாசித்தம்பி சில்லாலை கதிரை மாதா ஆலய மூப்பராகவும் கடந்த 40 ஆண்டுகளாக இருந்துவருகின்றார். (இ)

## புலமைப் பரிசிற் பரீட்சை
ஞானசுரபி வெளியீடு
## பொதுஉளச்சார்பு
விற்பனையாகின்றது விலை ரூபா 8-50
மேமாதம் 19-ந் திகதி நடைபெறவிருக்கும் பரீட்சைக்கான சிறந்த பயிற்சிகளை உள்ளடக்கிய புதிய பதிப்பு.
எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
எம்முடன் தொடர்பு கொள்ளும்
ஆசிரியர்களுக்கு 15% கழிவு கொடுக்கப்படும்.
வெளியீடு:
ஞானசுரபி புத்தகக் கம்பனி,
217, மின்சார நிலைய வீதி - யாழ்ப்பாணம்.
2032

## பிறந்த தின வாழ்த்து

செல்வி மா. ஜனுஷ்யா



யாழ்ப்பாணம் நவீன சந்தை, நாதன்ஸ் ஸ்தாபன முதல்வரும், புங்குடுதீவு 12-ம் வட்டாரத்தைச் சேர்ந்தவருமான த. மாணிக்கவாசகர் தங்கலக்சிமி தம்பதிகளின்ஏக புத்திரிசெல்வி ஜனுஷ்யா இன்று (30-3 79) வெள்ளிக்கிழமை தனது முதலாவது பிறந்ததினத்தை யாழ்ப்பாணத்தில்கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, தாத்தாமார், அப்பம்மா, அம்மம்மா, நாதன் சித்தப்பா, அத்தைமார், மாமாமார், பெரியம்மா, பெரியப்பா, சித்திமார், மற்றும் அன்பர்கள் ஆகியோர் நலமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள். 2026

# "யாழ்ப்பாணத்தில் பயங்கரவாத இயக்கம் இருப்பதாக அரசாங்கம்தான் கூறுகிறது!

## மக்கள் கருத்து

### பாதிக்கப்பட்டோர் பரிதாப நிலை

1977 ஆகஸ்ட் இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டோரில் குறிப்பாக விசுவமடுவில் குடியமர்த்தப்பட்டவரின்நிலையோ பரிதாபத்திற்குள்ளாகி விட்டது.

தண்ணீர் இல்லாத மேட்டு நிலத்தில் குடியிருங்கள் என்று அரசாங்கம் சொன்னதை ஏதுமறியாத மக்கள் ஏற்றுக்கொண்டனர். அரசாங்க அதிகாரிகளோடு அமைச்சர் திரு எஸ். தொண்டமானின் பிரதிநிதியாகிய திரு. விஜயசிங்கம் தலைமையில் யாழ். கச்சேரியில் நடந்த மகாநாட்டின் போது அரசாங்க அதிபரால் கைச்சாத்திடப்பட்ட பண உதவி வங்கியில் தேங்கிக்கிடக்க மக்கள் பசிபட்டினியால் துடிக்க நேர்ந்துள்ளது.

காடுவெட்ட, தூர்கழற்ற தற்காலிகவீடு அமைக்க வேலிபோட, கிணறுவெட்ட, நிரந்தர வீடு கட்டவுமாக அனுமதி வழங்கிய பணம் காணி, சீர்திருத்தியவர்களில் ஒருசிலருக்கு மாத்திரம், காணிவழங்கிய 9 மாதங்களுக்குப் பிறகு வழங்கப்பட்டது, மற்றைய காணிக்காரருக்குத் தீபாவளித் திங்களுக்குப் பிறகு ஒருவாரத்திற்குள் தருவதாகக் கிளிநொச்சி காணிப்பிரிவு அதிகாரிகள் சொல்லிவிட்டுச் சென்றனர். இன்றுவரை மக்கள் படும் அவஸ்தைக்கு யாரும் கைகொடுப்பதாயில்லை.

எங்களை வடமாகாணத்திற்கு அனுப்பிவைத்தது அரசாங்கமே. வந்த இடத்தில் வடபகுதி மக்கள் அன்புகாட்டினார்கள், ஆதரித்தார்கள். ஆறுதல் கூறினார்கள். தங்களால் முடிந்த உதவிகளையும் செய்தார்கள். இது என்றும் எங்களால் மறக்கமுடியாதது இவை தாடநிந்த உண்மை —அரசாங்கமே பர்மிட்மூலம் கொடுத்துவந்த ரேசன் அரிசியையும் நிறுத்திவிட்டது. விவசாயம் செய்தவைகளோ காட்டு மிருகங்களின் தொல்லைக்குள்ளாவிட்டது. மிஞ்சியதோ மழை இல்லாமலும் தண்ணீர் இல்லாமலும் மருந்து அடிக்காமலும் மருந்துக்குப் பணம் இல்லாததாலும் எல்லாம் நாசமாகிவிட்டது.

தக்க மயத்தில் பணஉதவி கிடைத்திருந்தால் ஓரளவாவது பயிர்களைக் காப்பாற்றியிருக்கலாம்.

அரசாங்கம் எங்களுக்குச் செய்யவேண்டிய உதவிகளைக் காலம் தாழ்த்தாது செய்வதன் மூலம் மேலான சமுதாயத்தை அமைக்கலாம்.

பெரும் சோதனைக்குள்ளாகியுள்ள பாதிக்கப்பட்டமக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இனிமேலாவது கவனத்திற்கு எடுத்துக் கொள்வார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

செயலாளர்,
வள்ளுவர் முன்னேற்றக் கழகம்.

விசுவமடு.

### நூலக விஞ்ஞான பயிற்சி

(கொழும்பு)

இலங்கை நூலக சங்கத்தினால் நடாத்தப்படும் நூலக விஞ்ஞான பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 5ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என இலங்கை நூலகசபை அறிவித்துள்ளது. (கு)

## பத்திரிகையாளர் சுற்றுலா— 5

## பத்திரிகையாளரிடம் சந்ததியார்

— கா. யோகநர்தன் —

கோண்டாவிலிருந்து நேராக புத்தூர் நோக்கி சென்றுகொண்டிருந்தோம். வழியில் நிலாவரை கிணற்றைப்பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எங்களுடன் உதவி அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கமும், நிலாவரைக்கு வந்திருந்தார். அவர் எங்களை நிலாவரைக்கு அழைத்துச் சென்றார்

கிணறு இருக்கும் காணி கோவிலுக்கு சொந்தமாக இருந்தது தற்போது நீர்ப்பாசன இலாகா பொறுப்பேற்றுள்ளது. நிலாவரைக்கிணறு என்று பேச்சு வழக்கில் சொன்னாலும், அது ஒரு கேணி போன்ற அமைப்பைக்கொண்டதாக இருந்தது.

### வற்றுத நீரூற்று

எதிரில் சிவன் கோவில்ஒன்று உள்ளது. சிவன் கோவிலுக்காக தீர்த்தக்கேணி தோண்டப்பட்டபோது வடபகுதி நோக்கி ஒரு சுரங்கவாய்க்கால் தென்பட்டது செக்கோசெலவாக்கியாவிலிருந்து வந்த ஆராய்ச்சியாளர், சுமார் 120 அடி தூரம், ஆராய்ச்சிநடத்தியபின் திரும்பிவிட்டனர். இதுவற்றுத நீரூற்று, எத்தனையோ, நீரிறைக்கும் யந்திரங்களை பூட்டியும், தண்ணீரை வெளியேற்றமுடியாமல் போய்விட்டது.

இக்கேணி பற்றி உதவி அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கம் பத்திரிகையாளருக்கு விளக்கமாக எடுத்துக்கூறினர்.

### நீர்ப்பாசன இலாகா பொறுப்பு

முன்பெல்லாம், இந்துக்கள் சமயக்கிரியைகளை இங்கு நடாத்தி, எலும்புகள், சாம்பல்கள் போட்டதாக, தான் கேள்விப்பட்டதாகவும், தற்போது நீர்ப்பாசன இலாகா பொறுப்பேற்றபின் அப்படி எவ்விதமான செயலும் நடைபெறுவதில்லையென்றும் அவர் கூறினர்

"இந்த நீர் எதற்குப் பயன் படுத்தப்படுகிறதென நிருபர் ஒருவர் கேட்டார்.

விவசாயச் செய்கைக்குப் பயன் படுத்தப்படுவதாகவும், தற்பொழுது 30 ஏக்கர் நிலத்திற்கு, 'பம்' மூலம் நீர்வழங்கப்படுவதாகவும், திரு. பஞ்சலிங்கம் கூறினர்.

யாழ்ப்பாணம் நகரத்திற்கு இங்கிருந்து குடிநீர் வழங்குவதற்கான ஒரு திட்டம் தெரிவிக்கப்பட்டதாகவும் அது இன்னும் பூர்த்தியாகவில்லையென்றும் அவர் கூறினர்.

நிருபர்: தினமும் எவ்வளவு நீர் விவசாயத்திற்கு பயன் படுத்தப்படுகிறது.

## காதலில் தோல்வி கண்டவர் தஞ்சமடைந்த கேணி!

### காதல் தோல்வி

"அக்காலங்களில் காதலில் தோல்வியுற்றவர்கள் இக்கேணியில்தான் தஞ்சமடைவார்கள்" என்று கூறிய திரு. பஞ்சலிங்கம் இப்பொழுதுதான் கடைகளில் சாதாரணமாக, பொலிடோல் போன்ற நஞ்சுத் திராவகங்களை பெறமுடிவதால், வீட்டிலிருந்தே தற்கொலை முயற்சியில் வெற்றிபெற்று வருகிறார்கள் என்றார்.

"இப்போது எவரும் தற்கொலைசெய்ய இங்கு வருவதில்லையா?" என்று ஒரு நிருபர் கேட்டபோது 'இல்லை' என்று உதவி அரசாங்க அதிபர் பதிலளித்தார்.

"யாராவது காதலில் தோல்வியுற்றவர்கள் இங்கு வந்திருக்கிறீர்களா?' என்று நிருபர் ஒருவர் வேடிக்கையாகக் கேட்டபோது பலத்த சிரிப்பு வெடித்தது.

முன்பு சிலர் கொலைசெய்யப்பட்டு, இக்கேணியில் போடப்பட்டதாக 'கதைகள்' பல இப்பகுதியில் கூறப்படுவதாகவும் திரு. பஞ்சலிங்கம் கூறினர்.

### 3,00,000 கலன்நீர்

பதில்: சுமார் 3,00,000 கலன்பயன் படுத்தப்படுகிறது. அதற்குக்கீழ் உப்புநீராக இருக்கிறது. கடலுடன் தொடர்பு இருக்கவேண்டும்.

அங்கிருந்து புத்தூர் கமத்தொழில்சேவை நிலையத்திற்கு சென்றுகொண்டிருந்தோம்.

வழியில பத்திரிகையாளர் ஒருவர், சந்ததியாரின்பேச்சை எடுத்தார். முதல்நாள் இளைஞர் இயக்கங்களை பத்திரிகையாவர் ஒரே நேரத்தில் தனித்தனிகுழுவாக சந்தித்தனர். நான் செந்தமிழர் இயக்கக் குழுவினரின் பேட்டியை அவதானித்துக் கொண்டிருந்த சமயம், திட்டமிடல் காரியாலய அறையில் தமிழ் இளைஞர் பேரவையினர் பேட்டியளித்துக் கொண்டிருந்தனர். இரண்டும் ஒரே சமயத்தில் நடந்தபடியினால், திரு சந்ததியாரின் பேட்டியில் ஒரு பகுதியை முதலில் உங்களுக்குத் தரமுடியாமல் போய்விட்டது

அந்தப் பேட்டியை அந்த நிருபர் குறிப்பு எடுத்துவைத்திருந்தார். அந்தப்பகுதியை அவர் பஸ்ஸில் செல்லும்போது என்னிடம் கூறிக்கொண்டிருந்தார். அவற்றை நான் குறித்துக் கொண்டேன். சந்ததியாரின் அந்தப் பேட்டியைத் தருகிறேன்.

### சந்ததியார் பேட்டி

நிருபர்: உங்கள் குறைகள் என்ன?

பதில்: நம் பிரதேசத்தில் வாழமுடியாமலிருக்கிறது. எங்கள் பொருளாதாரத்தைப் பாதுகாக்க முடியாமலிருக்கிறது. எங்கள் கலை, கலாச்சாரத்தை திட்டமிட்டு அழித்து ஒழிக்கின்றார்கள், இறுதியாக இனக்கலவரம்மூலம் தமிழரின் உயிருக்கே ஆபத்து இருக்கிறது.

நிரு: வேறு என்ன கூறவிருக்கிறீர்கள்?

ப: நமக்கு என்று ஒரு பிரதேசம் இருக்கிறது. அங்கு பொருளாதார வளமுண்டு அப்பொருளாதாரத்தை பின்பற்றி நீண்டகாலம் ஆண்டிருக்கின்றோம் எங்கள் கலை கலாச்சாரத்தைவளர்த்திருக்கிறோம். எமமை அரசு மூற்றாகஅழித்து தமிழ்தேசிய இனம் என்று இல்லாமல் செய்யும் விதத்தில் நடந்துவருகிறது.

### பாராளுமன்றத் தேர்தல் மூலம்....

நிரு: பாராளுமன்ற தேர்தலில் உங்களுக்கு நம்பிக்கையுண்டா?

ப: கடந்த 25 வருடகாலமாக பாராளுமன்ற தேர்தல்களினால், தமிழினத்திற்கு எள்ளளவும் நன்மையில்லை. இனத்தின் பிரச்சினை பற்றி பாராளுமன்றத்தில் குரல்எழுப்பலாமே தவிர வேறு எந்தவித நன்மையும் இல்லை.

நிரு: தென்னிலங்கையிலும் சில இடதுசாரிக் கட்சிகளுக்கு பாராளுமன்றத் தேர்தலில் நம்பிக்கையில்லையென்று தெரியுமா?

ப: ஆம்.

நிரு; அவர்களுக்கும் உங்களுக்கும் தொடர்புண்டா?

ப; மார்க்சிச அடிப்படையில்தான் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியும்.

நிருபர்: பயங்கரவாத இயக்கம் யாழ்ப்பாணத்தில் இருக்கிறதா?

ப: அப்படி இருப்பதாக அரசாங்கம்தான் தெரிவித்திருக்கிறது.

நிரு: மார்க்சிச அடிப்படையில் பல இனங்கள் ஒன்று கூடும் சௌகரியம்இருக்கிறது?

ப: சமூகஅமைப்பில் ஒடுக்குமுறை இல்லாவிட்டால் வாழ முடியும்.

### மார்க்சிஸ கொள்கை

நிரு: மார்க்சிச கொள்கை தனிப்பிரதேசம், இனம் என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. நீங்கள் ஏன் பிரிவினை கேட்கிறீர்கள்?

ப: ஒரு பிரதேசத்தில் ஒரு தேசிய இனத்தின் கோரிக்கைகளை நிராகரிப்பது மார்க்சிசமாக இருக்கமுடியாது.

நிரு: இன, சமுக ரீதியில் பிரிவினை கேட்காமல், பொருளாதாரப் போராட்டத்தை நடத்த முடியாதா?

ப: எங்கள் பிரச்சினை தென்னிலங்கையில் உள்ளதுபோல வர்க்கப்பிரச்சினை மட்டுமல்ல.

நிரு: பின் என்ன?

ப: எங்கள் பிரச்சினை, தேசிய விடுதலையுடன் கூடிய வர்க்க விடுதலையாகும்.

நிரு: மார்சியகொள்கையை ஏற்றால், முதலாளித்துவத்துக்கு எதிராக வடக்கிலும், தெற்கிலும் போராட முடியாதா?

### எமது பிரச்சினை கூடியது

ப: இங்கு இரண்டுவிதத்தை கவனிக்கவேண்டும். ஒன்று ஒடுக்குமுறை. மற்றது பாரிய ஒடுக்குமுறை. தெற்கில் குறைவான ஒடுக்குமுறை, வடக்கில் கூடிய ஒடுக்குமுறை. அதனால் நமது பிரச்சினை கூடியது.

நிலாவரையிலிருந்து எல்லோரும் கமத்தொழில் சேவை நிலையத்திற்குப் புறப்பட்டோம்.

(வளரும்)

## "தேசிய இனத்தின் கோரிக்கையை நிராகரிப்பது மார்க்ஸிஸமல்ல!"

## என்று நாம் காண்போம் இனி

யாழ். கந்தரோடை அங்கணமைக்கடவை மீனாட்சி அம்பாள் கோவில் பிரதம குரு பிரம்மஸ்ரீ கார்த்திகேயக்குருக்கள் அமரத்துவமடைந்த செய்திகேட்டு தற்போது கொழும்பு வந்துள்ள திருமுருக கிருபானந்த வாரியார் பாடிய இரங்கற்பா கீழே தரப்படுகிறது.

புகழ்கார்த்தி கேயப் புனித சிவாச் சார்ய
திகழ் கந்தன் பாதமலர் சேர்ந்து – தகவுற்றுய்
நன்று புரிந்து வந்த நாயகனே! நின்முகத்தை
என்றுநாம் காண்போம் இனி.

### காரைக்குடி கம்பன் விழா ஏப்ரல் 8 ல்

(யாழ்ப்பாணம்)

கவிச்சக்கரவர்த்தி கம்பன் திருநாள் விழா அடுத்தமாதம் 8-ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 3 நாட்களை தமிழ்நாடு காரைக்குடி கம்பன் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது

முதல் மகநாள் நிகழ்ச்சி திரு மா. பொ. சி தலைமையில் நடைபெறும். இரண்டாம் பூர நாள் நிகழ்ச்சி கவிஞர் வாலி தலைமையில் நடைபெறும் தியாகத்திற் சிறந்தவர் இலக்குவனே சடாயுவே கும்பகருணனே என்னும் பட்டி மன்றமும் மூன்றும் உத்தரநாள் நிகழ்ச்சியில் முதல் நாள் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டுப் பட்டி மன்றம் நடைபெறும் திருவாளர்கள் தெ. பொ. மீ. ஜி. கே. சுந்தரம் எஸ். ஸ்ரீநிவாசன் ஆகியோர் நடுவராகவிருப்பர் நான்காம் அத்தத் திருநாள் நிகழ்ச்சிகள் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் நாட்டரசன் கோட்டை கம்பன் அருட்கோயிலில் நடைபெறவுள்ளது. (கு)

### இன்று அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கரந்தன் அ.த.க. பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று மாலை நடைபெறும்.

கோப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ஆ. வ தங்கராசா சிறப்புரையாற்றுவார். (கு)

# பிரிட்டிஷ் அரசு நம்பிக்கை இழந்தது!

## விரைவில் பொதுத்தேர்தல்!!

### தீர்மானத்திற்கு ஆதரவு 311; எதிர் 310

லண்டன், மார்ச் 29

பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக எதிர்க்கட்சி கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பிரிட்டிஷ் அரசு தோற்கடிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி மார்க்கிரட் தட்சர் கொண்டுவந்த இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பிரிட்டிஷ் அரசு ஒரே ஒரு வாக்கால் மட்டுமே தோற்கடிக்கப்பட்டது.

இதை அடுத்து திரு. ஜேம்ஸ் கலகனின் பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசு இன்று அல்லது நாளை ராஜினுமாச் செய்யும் என்றும் ஏப்ரல் மாத இறுதியில் அல்லது மே மாத முற்பகுதியில் பொதுத்தேர்தல் நடைபெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

55 வருட கால பாராளுமன்ற ஆட்சியில் அரசு ஒன்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தோற்கடிக்கப்பட்டது இதுவே முதல்தடவையாகும்.

1974-ம் ஆண்டு பதவிக்கு வந்த தொழிற்கட்சி அரசுக்கு பல தடவைகளில் தோற்கடிக்கப்படும் நிலையில் இருந்த போதிலும் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவுடனேயே இதுவரை ஆட்சிப் பீடத்திலிருந்தது.

**கலகன் அறிவிப்பு**

அத்தியாவசிய அலுவல்கள் சில முடிவுற்றதும் தமது அரசு ராஜினுமா செய்துவிடும் என்று பிரதமர் திரு. ஜேம்ஸ் கலகன் தெரிவித்தார்.

இதேவேளையில் திரு. கலகன் இன்று பிரிட்டிஷ் மகாராணியாரைச் சந்தித்து தமது அரசின் நிலை குறித்து எடுத்துக் கூறுவார்.

**தட்சர் பிரதமர்?**

நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் தற்போதைய எதிர்க்கட்சியான கொன்சர்வேட்டிவ் கட்சித் தலைவி திருமதி தட்சர் பிரிட்டனின் முதலாவது பெண் பிரதமராகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

## கிருபளானியின் உடல் நிலை தேறுகிறது

புதுடில்லி, மார்ச் 29

அகமதாபாத் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஆச்சார்ய கிருபளானியின் உடல்நிலை தேறி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த இரவு அவர் நீண்ட நாட்களின் பின் காப்பி அருந்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## அமெரிக்க தூதரகத்திற்குள் புகுந்த ரஷ்யர்

மாஸ்கோ, மார்ச் 29

மாஸ்கோவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திற்குள் கைக்குண்டுகளுடன் திடீரெனப் புகுந்துகொண்ட ரஷ்ய இளைஞர் ஒருவர் தம்மை அமெரிக்காவில் குடியேற அனுமதிக்குமாறும அனுமதி மறுக்கப்படும் பட்சத்தில் தூதரகத்தை வெடி வைக்கப் போவதாவும் எச்சரிக்கை விடுத்துள்ளார். [இ]

## அருணோதயா பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அருணோதயாக்கல்லூரி பரிசளிப்பு விழா எதிர்வரும் 5-ம் திகதி வியாழக்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

திரு சி. இளையதம்பி நிறுவுனர் நினைவுச் சொற்பொழிவும பேராசிரியர் கைலாசபதி பரிசளிப்புப் பேருரையும் நிகழ்த்துவர். [கு]

## நாளை வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

"இணையும் இரண்டு தருவங்கள்" இருவர் சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா நாளை மாலை யாழ். நீர்பர் மண்டபத்தில் யாழ். வெளிவாரிப்பட்டதாரி மாணவர் ஒன்றியத்தலைவர் திரு. இ ஓங்காரமூர்த்தி தலைமையில் நடைபெறவிருக்கிறது.

தேவன் யாழ்ப்பாணம் வெளியீட்டுரையும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணிய ஐயர் திரு மு. இராஜரத்தினம் கோவை மகேசன் ஆகியோர் ஆய்வுரையும் நிகழ்த்துவர் நூலாசிரியர்கள் கணபதி கணேசன் ஆயிலியன் ஆகியோர் பதிலுரையாற்றுவார். (கு-வி)

## ரூ. 5 லட்சம் வைரம் தங்கம் கடத்தல்முயற்சிமுறியடிப்பு

### பெண் சென்னையில் அகப்பட்டார்

சென்னை, மார்ச் 29

சென்னை விமான நிலைய சுங்கப்பகுதியினர் மிகப்பெரும் வைரக்கடத்தல் ஒன்றை முறியடித்துள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளில் சென்னை சுங்கப்பகுதியினர் முறியடித்த கடத்தல் சம்பவங்களில் இதுவே மிகப் பெரிதாகும்.

சிங்கப்பூரிலிருந்து சென்னை வந்த விமானத்தில் பிரயாணம் செய்த மலேசியா பாஸ்போட் வைத்திருந்த 69 வயது பெண்மணி ஒருவரே 5 லட்சத்து 26 ஆயிரம் ரூபா பெறுமதியான வைரங்களையும் தங்கப்பாளங்களையும் தமிழ் நாட்டுக்குள் கடத்த முயற்சித்தபோது சுங்க அதிகாரிகளிடம் அகப்பட்டுக்கொண்டார்.

இவருடைய கைப்பையிலிருந்தே இக்கடத்தல் பொருட்கள் மீட்கப்பட்டன. [இ]

## விமானக் கட்டணமும் அதிகரிக்கப்படும்?

ஜெனிவா, மார்ச் 29

எண்ணெய் விலை அதிகரிப்பை அடுத்து விமானக்கட்டணங்களும் அதிகரிக்கப்படவுள்ளன.

விமானக் கட்டண அதிகரிப்பு குறித்து 63 விமானக் கம்பனிகளின் பிரதிநிதிகள் ஜெனிவாவில் கூடி ஆராய்ந்தனர்.

மகாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் சகலருமே விமானக்கட்டண அதிகரிப்பை வலியுறுத்தினர்.

5 முதல் 10 வீதம் வரை விமானக் கட்டணங்கள் அதிகரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. [இ]

கம்பாலா வீதிகளில் யுத்தம்:

## இடிஅமினின் படைகள் முன்னணியில்

கம்பாலா, மார்ச் 29

உகண்டா புரட்சிப்படைகளுக்கும் ஜனாதிபதி ஜெனரல் இடி அமின் ஆதரவுப் படைகளுக்குமிடையே கம்பாலா வீதிகளில் கடும் துப்பாக்கி யுத்தம் நடைபெற்று வருவதாகவும் இடி அமின் படைகள் முன்னணியில் நிற்பதாகவும் கம்பாலா செய்திகள் தெரிவிக்கின்றன.

புரட்சிப்படையினர் பலரை இராணுவப் பொலிஸ் கைது செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் உகண்டா புரட்சிப் படைகளுக்கு ஆதரவாகப் போராடி வரும் தன்ஸானியப் படைகள் உகண்டாவைவிட்டு வெளியேறுவதற்கு காலக்கேடு விதித்துள்ளதை அடுத்து உகண்டா பிரச்னை சர்வதேச பிரச்னையாக உருவாகலாம் என அஞ்சப்படுகிறது. [இ]



RIO (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
ANIMAL
(Full length Comedy)
Family Entertainment

வெஸ்லி
( )
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி - தேவிகா
வாழ்க்கைப் படகு

ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 10-30, 2-15, 6-15&9-45
ஜெய்சங்கர் - விஜயநிர்மலா
உயிரா மானமா
(புத்தம்புதிய பிரதி)

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) எம்.ஜி ஆர்.-சரோஜாதேவி
திருடாதே (புதிய பிரதி)

14-வது வாரம்
வின்ஸர் போன்: 666
தினசரி 5 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா தினசரி 10-30, 2-15, 6-15 & 9-45
(யாழ்நகர்) ஜெமினி - சாவித்திரி
நடித்த
கற்புக்கரசி
புத்தம்புதிய பிரதி

REGAL (Jaffna)
TODAY ONLY
Daily 3 Shows
4-30,
7-00 & 9-30 p.m. only
JEAN PAUL - BELMONDO in
THE HUNTER (color)
(Spy film)
From Tomorrow
CARRY ON BEHIND
Next Attraction
THREE YELLOW CATS

வெலிங்டன் தினசரி: 2-30, 6-30&9-45
(யாழ்ப்பாணம்) சனி, ஞாயிறு: 10-30, 2-30
6-30 & 9-45
எஸ் எஸ். ஆர். — விஜயகுமாரி
சாரதா
(புதிய பிரதி)

லிடோ போன்: 7638 தினசரி 4 காட்சிகள்
(யாழ் நகர்) கஸ்தூரி விஜயம்

தினசரி 4 காட்சிகள்
ராணி சிவாஜி - பத்மினி
(யாழ். நகர்) டி. ஆர். மகாலிங்கம்
ஸ்ரீ வள்ளி
(புதிய பிரதி—கலர்)
குறிப்பு: யாழ் நகரில் இதுவே கடைசித் தடவையாக திரையிடப்படுவதால் ஏமாற்றத்தைத் தவிர்க்க முந்துங்கள்.

மகத்தான ஜனத்திரள் நிறைந்த 2-வது வாரம்!
காட்சிக்குக் காட்சி ஜனக்கூட்டம் - பார்த்தோர் மீண்டும் மீண்டும் பார்க்கும் மன நாட்டம்.
சாந்தி போன்: 7642
யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45;
விநோத் கன்னா (வடநாட்டு ரஜனிகாந்த்)
கபீர் பேடி...மௌசமி சட்டர்ஜி...பகவான்...
பின்னணி: லதா மங்கேஷ்கர்
"கச்சே டாக்" —ஹிந்தி கலர்
Also: GORA AUR GALA Hindi Color (TRAILER)

## வட்டாரப் பாடசாலை மெய்வல்லுநர் போட்டி

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை வட்டாரப் பாடசாலைகளின் வருடாந்த மெய்வல்லுநர் இறுதிப் போட்டி ஏப்ரல் மாதம் 3ம் திகதி பிற்பகல் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. பிரதம அதிதியாக யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு எஸ். பி சிவபாதம் கலந்துகொள்வார் பரிசில்களை திருமதி த. சிவபாதம் வழங்குவார். [இ]

## இன்றைய பலன்

பங்குனிமாதம் 16-ம் திகதி

(30-3-1979)

வெள்ளிக்கிழமை

**மேடம்:** உள்ளத்தின் அடித்தளம் ஊமைக்கண்ணீர் வடிக்கும். குடும்பத்திலும் தொல்லைகள் உருவாகும் எதையும் சமாளித்துக் கொள்ளவும்.

**இடபம்:** தனிச் சிறப்புக் கிடமுண்டு. இன்பத்தின் எல்லைக்கே இழுத்துச் செல்லப் படுவீர்கள். எதிலும் குதூகலம் தென்படும்.

**மிதுனம்:** ஆனந்தமும் ஆத்திரமும் ஒன்றான நிலையில் அவதிப்படுவீர்கள். சிநேகிதரால் கவலை அதிகரிக்கும். பொறுமை நன்று.

**கடகம்:** தாய்வழிச் செய்தியும் கிடைக்கும். தொழில்புரியும் இடத்தில் செல்வாக்குப் பெருகும். இன்று சுபதினம்.

**சிங்கம்:** அறிவுத்தாகம் மேலோங்கி நிற்கும். எதிர்பாராத பணவரவுக்கும் இடமுண்டாம். எதையும் சிறப்பாகச் செய்யும்.

**கன்னி:** சிந்தையில் தடுமாற்றம். செய்தொழிலில் நஷ்டம். சிலருக்கு நூதன ரோகமும் தென்படும். சுகாதாரம் வேண்டும்.

**துலாம்:** குடும்ப நலனில் ஆர்வம் பிறக்கும். நிதானமான பேச்சு மற்றவர்களின் ஒத்துழைப்பைத் தேடித்தரும். முன்னேற்றமான நாள்.

**விருச்சிகம்:** சிலர் வாழ்க்கையில் பிரிவுத் துயர் வாட்டும். கொடுக்கல் வாங்கல் மூலம் தொல்லைகள் உருவாகலாம். நிதானபுத்தி நன்று.

**தனுசு:** எண்ணிய காரியங்கள் கைகூடும். புண்ணிய வழிகளால் பொருட்செலவும் ஏற்படும். பிதாவழிச் செய்தியும் கிடைக்கும்.

**மகரம்:** தொழிலில் புதுமையான சாதனைகள் உருவாகும். கற்றவர்கள் ஆதரவு தப்பாமல் கிட்டும். இடப்பிரிவும் ஏற்படும்.

**கும்பம்:** சிலருக்கு பொது சனத் தலைமையும் கிடைக்கும். வெளியிடத் தொடர்பும் ஏற்படும். பெரியோர் ஆதரவும் உண்டு.

**மீனம்:** முகமன் கூறுவோர் விடயத்தில் கவனம் செலுத்தவும். எண்ணிய கருமம் தடைப்படும். ஆத்திரத்தை அடக்கவும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர். - ராதா சலுஜா
இதயக்கனி

## "எதற்கும் தளராத நிலையை விளையாட்டுப் போட்டி ஏற்படுத்தும்"

[யாழ்ப்பாணம்]

சைவத்தமிழ் வளர்ச்சியை மூச்சிய குறிக்கோளாய்க் கொண்டு இயங்கி வரும் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலய இல்லவிளையாட்டுப் போட்டியில் பங்குபற்றியதை யிட்டுப் பெரிதும் அகமகிழ்கின்றேன் இப்படியான இல்ல விளையாட்டுப் போட்டிகள் மாணவர்களிடத்தே கடமை கண்ணியம் கட்டுப்பாட்டை வளர்ப்பனவாயுள்ளன. எதற்கும் தளராத நிலையை இது போன்ற விளையாட்டுப்போட்டிகள் இளமையிலேயே சிறுவர்களது இதயத்தில் ஏற்படுத்தி விடுகின்றன. பழந்தமிழ் நூல்களிற்கூறுவதுபோன்று வெற்றி கண்டு மகிழ்ச்சியோ, தோல்வி கண்டுதுயரமோ கொள்ளக் கூடாது. நாங்கள் எல்லாரும் ஈழமணித்திருநாட்டை வளப் படுத்த முயல வேண்டும்"

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலய இல்லவிளையாட்டுப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு வ சொக்கலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு வி. அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கோப்பாய் எம். பி. திரு. சி கதிரவேலுப்பிள்ளை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

கோப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா பாடசாலைக்கொடியை ஏற்றிவைத்துப் பேசுகையில் கூறியதாவது:

"உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயம் பலரதும் பாராட்டுக்குரியதாய் விளங்குகின்றது இவ்வித்தியாலய வளர்ச்சியைக்கண்டு கல்விப் பகுதியினர்பெருமகிழ்வுகொள்ளுகின்றனர். இப்பாடசாலையின் கல்வித்தரம் மேலும் மேலும் வளர்ந்து வருகிறதையிட்டு பெற்றோர் அபிமானிகள், யாவரும் திருப்திப்படுதலைக்கண்டு, பாடசாலை அதிபரையும்ஆசிரியர்களையும் பாராட்டுகின்றேன்.

"இவ்வித்தியாலயத்துக்கு வசதியான ஒரு விளையாட்டு மைதானம் இல்லாதிருப்பது பெருங்குறையாகும். இக்குறையைத்தீர்க்க என்னாலானவரை கல்வித்திணைக்களத்தாருடனும் பெற்றோர்கள் அபிமானிகளாயுள்ளவர்களோடும் மற்றும் பிரமுகர்களோடும் தொடர்புகொண்டு ஆவன செய்வேன்.

பிரதி அதிபர் திரு ஆ பஞ்சாட்சரம் வெற்றிக்கிண்ணங்களையும் கேடயத்தையும் வழங்கியவர்களைப் பாராட்டிவிட்டு இல்லப்போட்டி சிறப்படைய உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேசினார்.

குறித்த இல்ல விளையாட்டுப் போட்டியில் சிவப்பு இல்லம் முதலாம்இடத்தையும் மஞ்சள் இல்லம் இரண்டாம் இடத்தையும், பச்சை இல்லம் மூன்றும் இடத்தையும் சுவீகரித்துக்கொண்டன.

இ பாலகிருஷ்ணன், க. கதிஜா, அ. தவராசா, செ. செல்வமாலா, அ. பிரபாகரன், ஆ. கலா, செ. தேவசாந்தி, சி. இரவிசுவந்தன், ஆ பாமரைச்செல்வி, ந மலர்விழி, ஆகியோர் சிறந்த வீரர்களுக்கான வெற்றிக்கிண்ணங்களைப் பெற்றுக்கொண்டனர். [இ]

## தற்கொலை

[யாழ்ப்பாணம்]

பிறவியிலேயே முடமாகப் பிறந்துவிட்ட தனுள் கவலையோடும் விரக்தியோடும் வாழ்க்கை நடத்திவந்த ஒருவருக்கு முட்டு நோயும் இடையில் வந்துவிடவே, வாழ்க்கையில் சலிப்புற்று தற்கொலை செய்துகொண்ட சம்பவம் சுன்னாகத்தில் நிகழ்ந்துள்ளது

சுன்னாகம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த சின்னத்தம்பி குமாரசாமி (20 வயது) என்பவர் நேற்று முன்தினம் தனது வீட்டில் தோட்டத்திற்குப் பாவிப்பதற்கு வைத்திருந்த கிருமிநாசினியை குடித்துவிட்டு துடித்துக்கொண்டிருந்த போது, அவசரமாக யாழ். அரசினர் ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கு மரணமானார். மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரண விசாரணை நடத்தினார்.

மரண விசாரணையின்போது இறந்தவரின் பக்கத்து வீட்டைச் சேர்ந்த செல்லர் இராசதுரை எனும் இளைஞன் சாட்சியமளிக்கையில்; முட்டுநோய் தாங்கமுடியாததால் உயிரை மாய்க்கவிரும்பி கிருமிநாசினி அருந்தியதாக குமாரசாமி தன்னிடம் தெரிவித்தார் என்றும் வீட்டில் இருந்தவர்கள் தோட்டத்திற்குச் சென்றுவிட்டதால் தான் தோட்டத்திற்குச் சென்று, பெற்றோரை அழைத்து வந்து குமாரசாமியை யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றதாகவும் கூறினார்.

இறந்தவரின் தந்தை சின்னத்தம்பிசாட்சியமளிக்கையில் கூறியதாவது; "எனது மகன் பிறவியிலேயே முடம் இக்கவலை எனது மகனை வெகுவாகவாட்டியது. இந்நிலையில் முட்டுநோயும் இருந்தது சம்பவதினம் அவருக்கு முட்டுநோய் கூடுதலாக இருந்ததால் அவரை தோட்டத்திற்கு அழைத்துச் செல்லவில்லை தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்தபோது மகன் நஞ்சு குடித்துவிட்டதாக இராசதுரை தெரிவித்தார் இந்த மரணத்தில் எவ்வித சந்தேகமுமில்லை"

மரண விசாரணையின்பின் தற்கொலை என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார்.

## ஹொரணையில் முதல்தடவையாக இல்லப்போட்டி

[ஹொரணை]

ஹொரணை அரச். வின்சன்ட் பொரஸ் பாடசாலையிலே முதல் தடவையாக எதிர்வரும் 31ம்திகதி சனிக்கிழமை இல்ல விளையாட்டு போட்டி இடம்பெறவுள்ளது

புதிதாக தலைமை ஆசிரியையாக நியமனம்பெற்றுள்ள செல்வி ஆர் இராஜேஸ்வரி டக்ளஸின் முயற்சியால் இவ் விளையாட்டுப்போட்டி நடைபெறுகிறது. விளையாட்டுப் போட்டிக்கு மாணவ மாணவிகளைப் பயிற்றுவிக்கும் பொறுப்பை ஆசிரியை செல்வி நீற்று [செபஸ்ரியாம்பிள்ளை ஏற்றுள்ளார். [இ]

## யாழ். பல்கலைக் கழகம் முதலிடம்!

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பல்கலைக்கழகங்களிடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் சாம்பியன் பட்டத்தை சுவீகரித்துக்கொண்டது

களனி பல்கலைக்கழகத்தில் (வித்தியாலங்காரநடைபெற்ற இறுதிப்போட்டியில் யாழ்ப்பாண பல்கலைக்கழகக்கோஷ்டி பேராதனைப் பல்கலைக்கழகக் கோஷ்டியை 2-0 கோல்களால் வெற்றிபெற்றது.

செல்வன் எஸ். ஆனந்தன் தலைமையில் ஆடிய யாழ் பல்கலைக்கழகக் கோஷ்டியின் சார்பில் விளையாடிய ஆர். டி. எட்வேட், என். கங்கேஸ்வரன் ஆகியோர் முறையேஒவ்வொரு கோல்களை அடித்தனர்.

இவ்வருடாந்த சுற்றுப் போட்டியில் யாழ் பல்கலைக் கழகம் முதலாமிடத்தையும் (வெள்ளிக்கேடயம்) பேராதனைப்பல்கலைக்கழகம் இரண்டாமிடத்தையும், கட்டுப்பெத்தை பல்கலைக்கழகம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. [சொக் நிரு]

# இன்று 91ல் கால் பதிக்கும் கலையரசர்

— ம. சண்முகலிங்கம் —
[செயலாளர், நாடக அரங்கக் கல்லூரி]

தொண்ணூறு ஆண்டுகள் ஒருவர் வாழ்வதே இன்று ஒரு சாதனை. நோயின்றி வாழ்வது அதிலும் பெரிய சாதனை. இத்தனை ஆண்டுகள் நாட்டுக்கும், மக்களுக்கும். மொழிக்கும். நற்கலைகளுக்கும் ஆற்றுதற்கரிய பணிபுரிந்து வாழ்வது அரிதிலும் அரியசாதனை,

இந்த வயதிலும் ஐந்துவயதில் நடந்தவை தொடக்கம் நேற்று நடந்தவை வரை நினைவில் நிறுத்தி, ஆண்டு, மாதம், திகதி, நாள், நேரம் யாவற்றையும் தெளிவாக மீளக்கொணர்ந்து, தெளிவான உச்சரிப்புடன், உடலில் எந்தவித வேண்டாத ஆட்டம், அசைவு நடுக்கம் இன்றிக் கூறுவதென்ருல் அது நம்பமுடியாதவொன்று.

ஆனால் நவாலியில் அரவம் போல் வளைந்து நெளிந்துசெல்லும் ஒரு ஒழுங்கையின் முடிவில் கலைக்கூடம்போல் அமைந்திருக்கும் ஒரு நாற்சார் வீட்டில் ஒரு பழுத்த 'ஞானி' இருந்துகொண்டு தன்னைக் காணச் செல்லும் 'அடியவருக்கு' அந்த அற்புதத்தை நிகழ்த்திக்காட்டிக்கொண்டே இருக்கிருர்.

மெல்லிய கம்பியால் பின்னப்பட்ட சாய்மனக் கதிரையில் அதற்களவான மெத்தையும், தலைக்கு ஒரு தலையணையும் வைத்துச் சாய்ந்திருந்து, கால்கள் இரண்டையும் கதிரையின் கால்தாங்கு சட்டங்களில் அகலப் போட்டபடி பொக்குவாய் வெற்றிலையை அசைபோட, பரந்த உள்ளம் பழையகாலச் சம்பவங்களை அசைபோட்டபடி தியானத் துயிலில் அரைக்கண்மூடி, ஞானதீபம்போல் அமைதியாக அடங்கிஇருக்கும் நெடிய உருவம் அந்த ஞானியின் உருவம்.

இருளில் வாசலில் வரும்மனிதரின் அரவம் அவரது காதுகளில் தெளிவாக விழும். வந்தவர்கள் வாசற்படியில் ஏறுமுன் ''ஆரது'' என்று அந்த ஆத்மா ஒலியெழுப்பும். அந்த ஒலி உயர்ந்த நாதப்பொலிவு நிறைந்த குரலில் இளமை தொனிக்கும். கம்பீரம் கர்ச்சிக்கும் முதுமையின்சாயலே தெரியாது.

''ஆரது?'' என்ற ஆசானின் வினவுக்கு வாயிலில் வந்தவரில் ஒருவர் ''அது நான் ஐயா'' என்பார். ஓ, அதுஇன்ருரோ? என்று குரலுக்குரியவரின் பெயரைச் சரியாகச் சொல்லுவார். அதை அடுத்து வந்தவர் அனைவரும் ஒவ்வொருவராக "அது நான் ஐயா" என்ற பதங்களை வேதம் போல் தெளிவாக ஒலிக்க, அந்தக் குரலுக்குரியவரின்பெயர்களைச் சரியாகக் கூறுவார் அந்த முதுபெரும் கலைஞானியின் செவிப்பறவைகள் இந்த வயதிலும் ஒலிகளுக்கு எதிரொலிக்கும் சிறப்பினை இந்த ஆரம்ப நிகழ்ச்சி காட்டும்.

தொடர்ந்து சம்பாஷணைகள் இடம்பெறும்.

அவரது சம்பாஷணையினிடையே அடிக்கடி தான் மறந்துவிட்ட சிறிய விபரங்களை நினைவூட்டிக்கொள்வதற்கு இலக்கும்போல் பொலிவுடன் அடக்கமும் பணிவும் தன்னில் வந்து குடிகொண்டுவிட்டாற்போல் அமைதியாக ஆசனத்தில் இருக்கும் தனது தர்மபத்தினியை 'அம்மா' என்று அழைத்துக் கேள்விகளைக் கேட்டுத் தெளிவார்!

முதுமையின் சாயல் அவரது உடலில் சிறிது படிந்திருந்த போதிலும் உள்ளத்தை எந்த வகையிலும் அதனுல் ஊருடுவ முடியவில்லை,

நாடகத்துக்காகஇந்தமகான் ஆற்றிய பணிகள் சொல்லிமுடியாதவை, இவர் தனது குடும்பத்துக்காக ஆற்றியது எதுவுமில்லை. ஆனுல் ஒரு உத்தமமான மகனேடு, உயர்அதிகாரி ஒருவரின் திருமதியாக விளங்கும் மூத்த மகளையும். வைத்தியகலாநிதியாக உள்ள இளைய மகளையும், கல்வியிற் சிறந்த பேரன் பேத்திகளையும் தன் குடும்ப வாரிசுகளாகப் பெற்றுள்ளார். நாடகக்கலையில் நல்ல நாட்டமுடைய பலரை நாடெங்கிலும் தனது கலைவாரிசுகளாகக் கொண்டுள்ளார்.

இவ்வாறு விழுதுபட்டுப் படர்ந்து வளர்ந்துள்ள விருட்சமாகிய கலையரசு க. சொர்ணலிங்கம் ஐயா அவர்கள் இன்று தனது தொண்ணூற்று ஒராவது வயதில் அடிஎடுத்து வைக்கிருர். அவர் வாழ்க பல்லாண்டு.

# அரசின் பொறுப்பில் கல்வி என்றுமே இருக்கக்கூடாது

## விசேட குழுவின் கையில் ஒப்படைக்க வேண்டும் என்கிருர் பேராசிரியர்

[சுழிபுரம்]

கல்வி ஒருபோதும் அரசின் பொறுப்பில் இருக்கக்கூடாது. கல்விமான்கள், ஆசிரியர்கள், பெற்ருேர்கள் சர்வகட்சித் தலைவர்கள் அடங்கிய ஒரு விசேட குழுவிடமே கல்விக்கான பொறுப்பை ஏற்று ஒப்படைக்க வேண்டும், இவ்வாறு செய்வதன் மூலமே அரசியல் வாதிகளினதும் வெளியாரினதும் தலையீடின்றி மாணவர்கள் சிறந்த கல்வி அறிவைப் பெறமுடியும்.

இவ்வாறு கொழும்பு பல்கலைக் கழகப் பேராசிரியர் கலாநிதி ச. முத்துலிங்கம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்ற உயர்தர மாணவர் ஒன்றியத்தின் புதிய பாடத்திட்டம் எல் எழில் விருந்து வைபவத்தில் பேசுகையில் கூறினுர்.

ஒன்றியத் தலைவர் செல்வன் ந, கோகுலன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் கலாநிதி முத்துலிங்கம் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

எமதுநாட்டின் கல்வி நிர்வாகம் யாவும் கல்விமான்கள் குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும், அப்போதுதான் நாம் இந்த நாட்டில் சிறந்த கல்வியை பெற்றுக்கொள்ள முடியும்.

கடந்த அரசாங்கத்தின் கல்வி போதனை ஒன்ருகவும். இன்றைய அரசாங்கத்தின் கல்விவேறுகவும் உள்ளன. இந்த நிலைமையால் பாதிக்கப்பட்டவர்கள் எமது மாணவர்களே. இனிமேல் இப்படியான ஒரு நிலைமை ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாணவர்களுக்கு வேண்டிய வசதியைச் செய்து கொடுக்க வேண்டியது பெற்ருேரினதும், அரசினதும் கடமையாகும்.

திறமைக்கு முதலிடம் கொடுத்து கல்வியை போதிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தவர் கல்வியைக் கொண்டு முன்னேறுபவர்கள். இன்று உலகின் பல நாடுகளில் முதன்மையான பதவிகளை வகுத்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இப்போ இருக்கும் பல்கலைக்கழகம் போதாது. இன்னுமொரு பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும். அப்போதுதான் மேலும்பலர் உயர் கல்வியைக் கற்றுக் கொள்ளலாம்.

உள்ளத்தை நாம் பக்குவப்படுத்துவோமானுல் அன்பு ஏற்படும். அன்பிருந்தால் இந்த நாட்டில் வாழும் மக்களுக்கிடையே எவ்வித பாகுபாடும் ஏற்படாது. இன்றைய தமிழ்-சிங்கள இனப்பிரச்னையைக்கூட அன்பினுலே தீர்த்துக் கொள்ளலாம்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி வி. தர்மரத்தினம் கல்லூரி அதிபர் திரு. க. அருணுசலம் முன்னுள் அதிபர் திரு. எஸ். சிவஞானம், செல்வி சி கோமதி, செல்வன் சு சுரேந்திரன், செல்வன் தே. பகீரதன் ஆகியோரும் உரையாற்றினர்.

## கோர பஸ் விபத்து...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கலாமென்றும் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

விபத்து நடந்தபோது எதிர் திசையில் இருந்து ஒரு டாக்சி வந்ததாகவும் அதே பஸ் முன்பாகச் சென்று கொண்டிருந்த டிரக்டரை விலத்த முற்பட்டதாகவும் அவ்வேளையில் பஸ்ஸில் பிரயாணம் செய்த ஆண்களும் பெண்களும் விபத்து நேரப் போவதை உணர்ந்து கூக்குரலிட்டு ஒப்பாரி வைத்ததாகவும் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி சண்முகம் சுந்தரம் [45 வயது] என்பவர் ஸ்தலத்திலேயே மரணமானுர்

மற்றும் பிரயாணிகளான திருமதி இந்திரதன் திலகவதி (40 வயது வேலணை] குலசிங்கம் பூபதி [26 வயது புங்குடுதீவு] சுப்பிரமணியம் வள்ளியம்மை ]42 வயது வேலணை] சிவக்கொழுந்து [76 வயது புங்குடுதீவு] அந்தோனிப்பிள்ளை பிலிப்பையா, சவிரிமுத்து [58 வயது சாமி அன்கோ), ஆகியோர் பலத்த காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் 4ம் வார்ட்டிலும், 15ம் 17ம் வார்ட்டுகளிலும் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

சாரதி பிரான்சிஸ் பொன்ராசா என்பவரும் கடும் காயத்திற்குள்ளாகி 17ம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு இவ்வீதியில் ஏற்பட்ட விபத்தென்றில் நால்வர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்விபத்துப் பற்றிய விசாரணையை யாழ்.போக்குவரத்து இன்ஸ்பெக்டர் எஸ் சேனுதிராசா, சார்ஜன்ட் பாலசுப்பிரமணியம் ஆகியோர் மேற்கொண்டுவருகின்றனர்.

[கொக்-நிரு]

## ஜி. சி. ஈ....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரும் தாம் முன்பு பயின்ற பாடசாலையின் பெயர் குறிப்பிடாது விட்டிருப்பதால் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களைப் பரிசீலனைசெய்யமுடியாதிருப்பதாக வித்தியாதிபதி திரு. மாணிக்கவாசகர் கூறினுர். எந்த மாணவனும் தனது விண்ணப்பத்தில் தான் முன்னர் பயின்ற பாடசாலையின் பெயரைக் குறிப்பிடவில்லையாம்.

விண்ணப்பப்படிவத்தில் முன்னர் பயின்ற பாடசாலைப் பெயர் கோரும் விபரம் அச்சிடப்படாதிருப்பதே இதற்குக் காரணமாயிருக்கலாமென்றும் கூறிய திரு. மாணிக்கவாசகர் விண்ணப்பதாரி தான்முன்னர் பயின்ற பாடசாலை விபரத்தைத் தெரிவிக்காதவரையில் அவரது விண்ணப்பம் பரிசிலிக்கமுடியாதென்றும் தெரிவித்தார்.

ஜி ஸி ஈ உயர்தர வகுப்புக்கு அனுமதி கோரி விண்ணப்பித்தமாணவர்கள் உடனடியாக முன்னைய பாடசாலையின் பெயர் விபரங்களை எழுத்துமூலம் தமக்கு அறிவிக்குமாறு 'ஈழநாடு' மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தமிழன்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மார் குரல் கொடுத்து உதவியதுடன், பொருள் உதவியும் அளித்தனர். எமது செயலாளர் நாயகம் அமிர்தலிங்க பாரியாரும் இந்தியா சென்றபோது பிரமாண்டமான வரவேற்பு அளித்துக் கௌரவித்தனர். இத்தகைய அண்ணுவின் அறநெறிபியல் வளர்த்த எம். ஜி. ஆரின் நாமம், இந்தியாவிலமட்டுமல்ல, கடல் கடந்த நாடுகளிலும் பரவியுள்ளமை அவரின் பெருமையை உலகுக்கு உணர்த்துகிறது'' என்று கூறினுர்.

### சரித்திரம் சாதித்தவர்

ஜனுப் எஸ். ஜே. சாஹிர் பேசுகையில் கூறியதாவது:-

''நான்கு வருடங்களுக்குள் புதிய கட்சி ஒன்றை உருவாக்கி, அதன்மூலம் தமிழ் நாட்டில் ஆட்சி அமைத்து இந்தியச் சரித்திரத்திலேயே முதலிடத்தைப் பெற்றவர் எம். ஜி. ஆர்.

மக்கள் மத்தியில் செல்லாக் காசாக மாறிவிட்ட கருணுநிதி மீண்டும் பதவியைக் கைப்பற்றுவதற்காக எமது தலைவரைப்பற்றி விஷமத்தனமாகப் பிரசாரங்களை மேற்கொண்டுவருகிருர். அவரை மக்கள் இனம் கண்டுவிட்டார்கள்.

தமிழ்நாடு அரசு மத்திய அரசிற்கு கட்டுப்பட்டது. இருந்தபோதும் எமது தலைவர் ஈழத்து தமிழ் மக்களுக்கு முடிந்தவரை உதவி செய்யப் பின் நிற்கமாட்டார்'' என்று கூறினுர்.

[கொக். நிரு]

## இன்றைய திருவிழா

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி கோவில் மகோற்சவம் 8-ந் திருவிழாவாகிய இன்று பகல் 9 மணிக்கு பூஜையாகி மஞ்சத்தில் உள்வீதி வலமும் மாலை 6-30 மணிக்கு பூஜையாகியானை வாகனத்தில் வெளிவீதி வலமும் வந்து ஞானசம்பந்த வாகீச, சுந்தர வாதபுரீஸ்வர சுவாமிகள் காட்சி கொடுத்து அருளுவார்கள்.

## கசிப்பு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தப்பி விட்டாராம். அவரைத் தேடி பொலிசார் தீவிர தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்

காங்கேசன்துறைப்பொலிஸ் பகுதியைச்சேர்ந்த கட்டுவனில் கசிப்பு உற்பத்தியாளர்கள் பெருகிவருவதாக தெரியவந்ததையடுத்து காங்கேசன் துறை பொலிஸ் கோஷ்டியொன்று அங்கு சென்றபோது அவர்களைக் கண்ட நபர் ஒருவர் தாம் கொண்டு வந்த பீப்பா ஒன்றை வீதியில் போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தாராம்.

அந்த பீப்பாவில் கசிப்புக் காணப்பட்டதாம். பொலிசாரைக் கண்டதும் ஓட்டம் பிடித்ததாகக் கருதப்படும் சபாரத்தினம் இரத்தினசிங்கம் என்னும் நபரை தேடிப் பொலிசார் வலைவிரித்துள்ளனர்.

## மட்டக்களப்பில்

## க.பொ.த.(உயர்தரம்)பரீட்சை கருத்தரங்கு

[மட்டக்களப்பு]

இயற்கையின் கொடுமையினுல் பாதிக்கப்பட்ட க. பொ. த [உயர்தர] வகுப்புப் பரீட்சார்த்திகளை ஊக்குவிக்குமுகமாக ஈழமாணவர் பொதுமன்றத்தினர். விரைவு மீட்டற்பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றனர். ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் தகுதி வாய்ந்த ஆசிரியர்களினுல் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளது.

இதுவரை இவ்வகுப்புகளில் கலந்துகொள்ளாத மாணவர்களும் இக்கருத்தரங்குகளில் பங்குபற்றக்கூடிய வசதிகள் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள் செய்து வருகின்றனர். இக்கருத்தரங்கு சம்பந்தமான விபரங்களை தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்படைத் தலைமைச் செயலகம், இந்து இளைஞர் மன்றம், மட்டக்களப்பு என்னும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீதி இணைப்பில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் வசிக்கும் மக்கள் மகஜரொன்றை யாழ். எம். பிக்கும், மாநகர விசேட ஆணையாளருக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

இது சம்பந்தமாக யாழ் எம். பி. திரு வெ யோகேஸ்வரன் சம்பந்தப்பட்ட காணிக்காரருடன் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்திவருகிருர் என்றும் அறியப்படுகிறது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மார்ச் மாதம் 30-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the Geneial Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389,